# தமிழ்நாட்டில் இந்தியை நுழைய விடாதே!

[தோழர் எஸ். கே. சிசுபாரதி]

செந்தமி ழோங்கிடவே—தமிழா!
செய்திடு தொண்டுகளே!
வெந்தனல் வீரத்திலே—தமிழா!
வேகவை இந்தியையே!
சந்தத் தமிழினிலே—தமிழா!
சாகவை இந்தியையே!
பைந்தமிழ் தீரத்திலே—தமிழா!
பற்றிடு வெற்றியையே!
காங்காஸ் மந்திரிகள்—தமிழா!
கழறு மிந்தி மொழி!
ஏங்கி இறந்திடவே—தமிழா!
இந்தமிழ் நாட்டினிலே!
தாங்கி தமிழ்க்கொடியே—தமிழா!
தட்டிடு பேரிகையே!
ஓங்கிட முத்தமிழே—தமிழா!
ஒற்றுமைச் சங்கொலிப்போம்!